අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
Minister of Education, Higher Education and Vocational Education
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය - 2026
கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2026
General Certificate of Education (Ordinary Level) Examination - 2026

උපකාරක තක්සේරුව
உதவி மதிப்பீடு
Supportive Assessment

දෙමළ මාධ්‍යය
தமிழ் மொழி மூலம்
Tamil Medium

පුරවැසි අධ්‍යාපනය
CIVIC EDUCATION - குடியியற் கல்வி



ප්‍රශ්න පත්‍රය I/II - வினாப்பத்திரம் I/II - Question Paper I/II

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
தேசிய மொழிகள் மற்றும் சமூக விஞ்ஞான கிளை
Ministry of Education, Higher Education and Vocational Education
National Languages and Humanities Branch

Past Papers Wiki

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

Ministry of Education, Higher Education and Vocational Education

62	T	I

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය (උපකාරක තක්සේරුව)- 2026

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை (உதவி மதிப்பீடு) – 2026

General certificate of Education (Ord. Level) Examination (Supportive Assessment) - 2026

පුරවැසි අධ්‍යාපනය I, II
குடியியற் கல்வி I, II
Civic Education I, II

පැය තුනයි.
மூன்று மணித்தியாலம்
Three Hours

අමතර කියවීම් කාලය	- මිනිත්තු 10
மேலதிக வாசிப்பு நேரம்	- 10 நிமிடங்கள்
Additional Reading Time	**- 10 minutes**

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக்கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.

குடியியற் கல்வி - I

அறிவுறுத்தல்கள்:

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள (1), (2), (3), (4) எனும் விடைகளில் சரியானது அல்லது மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்குமுரிய வட்டங்களில் நீர் தெரிவுசெய்த விடையின் இலக்கத்திற்குரிய வட்டத்தினுள் புள்ளடி (x) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள ஏனைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றையும் பின்பற்றுக.

(1). அரசினுள் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதோடு, பிரஜைகளைப் பொதுவான இலக்கொன்றை நோக்கி வழிநடத்தும் நிறுவனம்,

(1) பொலிஸ்
(2) அமைச்சரவை
(3) அரசாங்கம்
(4) இராணுவம்

(2) ஓர் அரசினுள் பல்வேறு கலாசாரங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றபோதிலும், அவர்கள் அனைவரும் பொதுவாக எவ்வாறு அழைக்கப்படுகின்றார்கள்

(1) இனக்குழுக்கள்
(2) தேசம்
(3) பழங்குடி
(4) குலம்

(3) நபர் ஒருவர் தனது அரசியல், பொருளாதார மற்றும் சமூகத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகச் சமூகத்திலிருந்து கிடைக்கும் வாய்ப்பு எவ்வாறு குறிப்பிடப்படுகின்றது.

(1) உரிமைகள்
(2) சுதந்திரம்
(3) சமத்துவம்
(4) கடமைகள்

(4) பொருளாதாரமொன்றின் வளங்களை மனிதத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் வகையில் மாற்றிக்கொள்ளும் செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்.

(1) உற்பத்தி
(2) பகிர்வு
(3) நுகர்வு
(4) வர்த்தகம்

(5) ஐக்கிய நாடுகள் சபையின் (UNO) பிரதான நிர்வாக அங்கமாக அமைவது பின்வருவனவற்றுள் எது?

(1) பொதுச்சபை.
(2) செயலகம்.
(3) பாதுகாப்புச் சபை.
(4) சர்வதேச நீதிமன்றம்.

(6) மத்திய அரசாங்கத்திற்குரிய சட்டவாக்கம், நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை ஆகிய அதிகாரங்களை அரசியலமைப்பின் மூலம் பிராந்திய அரசாங்கங்களுக்குப் கையளிக்கும் செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்

(1) அதிகாரப் கையளிப்பு.
(2) அதிகார பன்முகப்படுத்தல்.
(3) அதிகார பரவலாக்குதல்.
(4) அதிகாரப் பகிர்வு.

(7) தனிநபர்கள் பண்பாடுச் சார்ந்த கடமைகளை நிறைவேற்றும்போது நீதிபதியாகச் செயற்படுவது,

(1) உயர்நீதிமன்றமாகும்.
(2) மனசாட்சியாகும்.
(3) சமூகச் சூழலாகும்.
(4) இணக்கச்சபையாகும்.

(8) பயன்படுத்தப்படுகின்ற முறைக்கேற்ப உற்பத்தி பொருட்களை வகைப்படுத்தும்போது நுகர்வுப் பொருட்களை மாத்திரம் உள்ளடங்கியுள்ள விடையாக அமைவது பின்வருவனவற்றுள் எது?

(1) உணவு, மருந்து, ஆடைகள்.
(2) ஆடைகள், மருந்து, உரம்.
(3) உணவு, உரம், மரக்குற்றிகள்.
(4) ஆடைகள், உணவு, மரக்குற்றிகள்.

(9) முரண்பாட்டிற்கு அடிப்படையாக அமையும் சமூகப், பொருளாதார, அரசியல் சூழ்நிலை எவ்வாறு அழைக்கப்படும்

(1) மனப்பாங்கு.
(2) சூழ்நிலை.
(3) நடத்தை.
(4) பிரதி பிம்பம்.

(10) வகுப்பறையினுள் மாணவர்களிடையே ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய பிரதான முறை எது?

(1) கலந்துரையாடல்.
(2) காப்பாற்றுதல்.
(3) இணக்கப்படுத்தல்.
(4) தீர்ப்பு வழங்குதல்.

(11) இலங்கையின் தேசிய சட்டத்தின்படி சிவில் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்படக்கூடிய குற்றம் எது?

(1) அரசு விரோத செயற்பாடுகள்.
(2) திருமணம் சார்ந்த பிரச்சினைகள்.
(3) கற்பழிப்பு.
(4) போதைப்பொருள் விற்பனை.

(12) இலங்கையில் முதன்முதலாக அடிப்படை உரிமைகளை உள்ளடக்கிய அரசியல் யாப்பு எது?

(1) 1931 டொனமூர் அரசியல் யாப்பு.
(2) 1947 சோல்பரி அரசியல் யாப்பு.
(3) 1972 முதலாம் குடியரசு அரசியல் யாப்பு.
(4) 1978 இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பு.

(13) பின்வருவனவற்றுள் நாட்டினுடைய அபிவருத்தியை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் பாரம்பரிய அளவுகோல் எது?

(1) தொலைபேசிகளின் எண்ணிக்கை.
(2) மனித அழுத்தச் சுட்டி.
(3) மொத்த தேசிய உற்பத்தி
(4) பசுமை மொத்த உள்நாட்டு உற்பத்தி

(14) பிம்ஸ்டெக் (BIMST-EC) அமைப்பிற்கு உரித்துடைய நாடுடொன்று **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது?

(1) சுவிட்சர்லாந்து.
(2) இந்தியா.
(3) மியன்மார்
(4) தாய்லாந்து

(15) ஜனநாயக ஆட்சியொன்றில் அமைதியான சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்குக் காரணமாகும் விடயம்,
(1) ஆட்சியாளரைச் சட்டத்திற்கு மேலாக மதித்தல்.
(2) பெரும்பான்மை கருத்துகளுக்கு மாத்திரம் மதிப்பளித்தல்.
(3) கலந்துரையாடல்கள் மூலம் தீர்மானங்களுக்கு வருதல்.
(4) சிறுபான்மையினரின் கருத்துக்களைப் பொருட்படுத்தாமை.

(16) 1978 ஆம் ஆண்டின் 2வது குடியரசு அரசியலமைப்பின் 13வது திருத்தத்திற்கு அமைய, நிர்வாகக் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் மாகாண சபைக்குக் கூட்டாகப் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டிருப்பவர்கள் யாவர்?
(1) ஆளுநரும் முதலமைச்சரும்.
(2) முதலமைச்சரும் அமைச்சரவையும்.
(3) ஆளுநரும் அமைச்சரவையும்.
(4) முதலமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவரும்.

(17) நீதியை நிலைநாட்டுவது தொடர்பில் முக்கியமான விடயம் எது?
(1) வழக்கு விசாரணையின்றி நஷ்டஈடு வழங்கிச் சமரசமடைதல்.
(2) தான் நிரபராதி என்பதை நிரூபித்தல்.
(3) தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் யாவை என அறிந்துகொள்ளல்.
(4) வழக்கு விசாரணையின்போது தனக்குச் சாதகமான சட்டத்தரணியொருவரை தெரிவுசெய்தல்.

(18) ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய உடன்படிக்கையைத் தயாரிப்பதற்கு அடிப்படையாக அமைந்த கோட்பாடு,
(1) விரும்பிய மதத்தைப் பின்பற்றுவதை உறுதிப்படுத்தல்.
(2) இலவசக் கல்வியைப் பெறுவதற்கான உரிமையை உறுதிப்படுத்தல்.
(3) சிறுவர்களைப் பாகுபாடின்றி நடாத்துதல்.
(4) குடும்ப உறுப்பினர் என்ற அங்கீகாரத்தை உறுதிப்படுத்தல்.

(19) இலங்கையின் உள்ளூராட்சி தொடர்பில் தரப்பட்டுள்ள சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) நீண்ட வரலாற்றை கொண்டிராத, சமீபத்திய காலத்தில் உருவான ஒன்றாகும்.
(2) கொழும்பு மற்றும் கண்டி என்பன முதலாவதாக உருவாக்கப்பட்ட மாநகர சபைகளாகும்.
(3) 1978 அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 14வது திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்டதாகும்.
(4) பிராந்தியப் பரிபாலனத்தைப் பலவீனப்படுத்தும் ஓர் ஆட்சி அமைப்பாகும்.

(20) பின்வருவனவற்றுள் அபிவிருத்தியடைந்த நாடுகளின் பண்பொன்றாக அமைவது,
(1) தொழில்நுட்ப அறிவு குறைவாக இருத்தல்.
(2) சிசுமரண விகிதம் குறைவாக இருத்தல்.
(3) பாதகமான வர்த்தக நிலுவை காணப்படுதல்.
(4) வேலையின்மை உயர்வாகக் காணப்படல்.

(21) இலங்கையின் சமீபத்திய பொருளாதார நெருக்கடிக்கு நிவாரணமாக நிதியுதவிகளை வழங்கிய ஐக்கிய நாடுகள் சபையின் இணை நிறுவனம் எது?
(1) ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் (UNDP)
(2) ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் (UNFPA)
(3) உலக வங்கி (IBRD)
(4) சர்வதேச நாணய நிதியம் (IMF)

(22) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் மேற்கொள்ளகூடிய சிறந்த தீர்வு,
(1) ஒரே மாதிரியான சந்தையைத் தேடிச் செல்லல்.
(2) இறக்குமதிப் பொருட்களைப் பெருமளவில் பயன்படுத்தல்.
(3) மாற்று வலுச்சக்திகளை அறிமுகப்படுத்தலும் பயன்படுத்தலும்.
(4) உள்நாட்டு முதலீடுகளுக்குப் பதிலாக வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல்.

(23) நாட்டில் அமைதியான அரசியல் சூழலைக் கட்டியெழுப்புவதற்கும், ஊழல் மற்றும் துஷ்பிரயோகமற்ற அமைதியான சமூகமொன்றை உருவாக்குவதற்கும் ஏதுவாக அமையும் மிக முக்கிய காரணி பின்வருவனவற்றுள் எது?
(1) அறிவார்ந்த மற்றும் அரசியல் அறிவு படைத்த மக்கள் காணப்படல்.
(2) சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை நடைபெறல்.
(3) சட்டத்தின் ஆட்சியையும் நீதித்துறையின் சுயாதீனத்தையும் ஏற்படுத்துதல்.
(4) சுதந்திரமானதும் பக்கச்சார்பற்றதுமான ஊடகம் காணப்படுதல்.

(24) சமூகத்தினுள் நல்லாட்சிப் பண்புகளை வளர்க்கும்போது பொருளாதாரத் துறையின் முன்னேற்றத்திற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கை,
(1) ஏனைய கலாசாரங்களை மதிக்கப் பழகிக்கொள்ளல்.
(2) முடிவுகளை மேற்கொள்வது தொடர்பில் சுதந்திரமாக செயற்படல்.
(3) விரும்பிய பிரதேசத்தில் குடியமர்வதற்கான வாய்ப்பினை வழங்குதல்.
(4) சமனற்ற வருமானப் பகிர்வினை குறைப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்.

(25) தேசிய மட்டத்தில் இனங்கள், மதங்கள் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு இடையே ஏற்படும் மோதல் எவ்வாறு அழைக்கப்படும்
(1) நுண்மையான மோதல்.
(2) வெளிப்படையான மோதல்.
(3) நேர்மறை மோதல்.
(4) எதிர்மறை மோதல்.

(26) காலதாமதமின்றியும் நடுநிலையாகவும் நீதியை நிலைநாட்டுவதன் மூலம்,
(1) நாட்டினுள் இடம்பெறும் குற்றங்களும் ஊழல்களும் அதிகரிக்கும்.
(2) சட்டத்திற்குப் பதிலாக அநீதி மேலோங்கும்.
(3) நீதியைப் பெற்றுக்கொள்வதற்கு மாற்று வழிகள் பயன்படுத்தப்படும்.
(4) நீதிமன்றக் கட்டமைப்பின் மீதான நம்பிக்கை விருத்தியடையும்.

(27) நியாயமான வழக்கு விசாரணைக்கான உரிமை பின்வரும் எவ்வுரிமை வகைக்குள் அடங்கும்,
(1) பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள்.
(2) சமூக மற்றும் கலாசார உரிமைகள்.
(3) பொருளாதார மற்றும் சமூக உரிமைகள்.
(4) சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்.

(28) ஒரு பிரஜை எனும் வகையில் நிலையான அபிவிருத்தி (பேண்தகு அபிவிருத்தி) தொடர்பில் செய்ய வேண்டிய மிக முக்கியமான விடயம் யாது?
(1) சுற்றாடல் சட்டங்களையும் தரநிலைகளையும் உருவாக்குதல்.
(2) சுற்றாடல் பாதுகாப்புத் வேலைதிட்டங்களைத் திட்டமிடுதல்.
(3) அதிக நுகர்வைக் கட்டுப்படுத்தலும் விழிப்புணர்வை ஏற்படுத்தலும்.
(4) சூழல்நேய பொருட்கள் மற்றும் சேவைகளைப் பயன்படுத்தல்.

(29) சர்வதேச தொடர்புகளைக் கட்டியெழுப்புவதன் மூலம் கிடைக்கும் நன்மையாவது,
(1) அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு கிடைக்கும்.
(2) நண்பராக அல்லது எதிரியாக ஒரே தரப்பைச் சார்ந்து நிற்க முடியும்.
(3) நாட்டின் பெறுமதிமிக்க வளங்களும் சொத்துக்களும் பாதுகாக்கப்படும்.
(4) பலம்பொருந்திய அரசாக முன்னிலைக்கு வர முடியும்.

(30) சமஷ்டி (கூட்டாட்சி) அமைப்பொன்றின் நன்மையை காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) விரைவாகவும் இலகுவாகவும் தீர்மானங்களை எடுக்க முடியும்.
(2) ஆட்சியில் அமைதியான சூழ்நிலை ஏற்படும்.
(3) பரப்பளவில் பெரிய அரசுகளுக்கு மிகவும் பொருத்தமானதாக இருக்கும்.
(4) நிர்வாக முறையும் நீதிமன்ற முறையும் பொதுவான ஒன்றாக இருக்கும்.

(31) கலப்புப் பொருளாதார அமைப்பொன்றில் காணக்கூடிய பண்பாவது,
(1) மத்திய திட்டமிடல் சபையொன்றினால் பொருளாதாரம் வழிநடத்தப்படும்.
(2) இலாபத்தை நோக்கமாகக் கொண்டு உற்பத்தி மேற்கொள்ளப்படும்.
(3) சொத்துக்களின் உரிமை அரச துறையிடம் காணப்படுவதாகும்.
(4) நலன்புரிச் சேவைகளை வழங்குவதில் அரச தலையிடு காணப்படும்.

(32) உரிமைகள் பற்றிய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) பல்வேறு போராட்டங்கள் மற்றும் போர்கள் மூலம் வென்றெடுக்கப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.
(2) தேசம், இனம், மதம், மொழி என்பவற்றுக்கு ஏற்ப உரிமைகள் காணப்படுவது இதன் சிறப்பம்சமாகும்.
(3) அனைத்து மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகளாக கருதப்படும்.
(4) சமூகம் படிப்படியாக வளர்ச்சியடைந்தமையால் இதன் மீதான கவனம் குறைந்தது.

(33) சார்க் (SAARC) அமைப்பு நிறுவப்பட்டதன் நோக்கமாக அமைவது,
(1) உள்நாட்டு அரசியல் மோதல்களின் போது ஒருவருக்கொருவர் உதவுதல்.
(2) பிராந்திய மக்களின் நலன்புரி மற்றும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல்.
(3) இராணுவ அமைப்பாகப் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.
(4) அரச தலைவர்களுக்கு இடையே சினேகபூர்வ சந்திப்புகளை நடத்துதல்.

(34) ஐக்கிய அமெரிக்க குடியரசின் சட்டவாக்க சபை (மன்றம்) எப்பெயரில் அழைக்கப்படுகின்றது
(1) பாராளுமன்றம்.
(2) கூட்டாட்சிப் பொதுச்சபை.
(3) காங்கிரஸ் சபை.
(4) சமஷ்டி சபை.

(35) நாட்டின் பொருளாதார வளர்ச்சி மந்தமடைதல் சமூக நீதி சீர்குலைதல் என்பனவற்றில் செலுத்தும் பிரதான காரணி எது?
(1) அரச நிர்வாகம் வினைத்திறன்மிக்கதாக காணப்படல்.
(2) அரச சேவை அரசியல்மயப்படுத்தப்படாமை.
(3) இலஞ்சமும் ஊழலும் அதிகரித்தல்.
(4) ஆட்சியாளர்கள் பொறுப்புடன் செயற்படுதல்.

(36) உலகமயமாக்கலினால் இலங்கைக்கு ஏற்படும் எதிர்மறையான செல்வாக்காக அமைவது
(1) வெளிநாட்டுக் கடன்களைப் பெறும்போது நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட நேரிடல்.
(2) வினைத்திறனற்ற தொழில்துறைகள் சந்தையிலிருந்து வெளியேற்றப்படுதல்.
(3) உள்நாட்டு உற்பத்திச் காரணிகளுக்கு அதிக கேள்வி ஏற்படல்.
(4) பொருளாதாரப் பன்முகத்தன்மை ஏற்படுவதல்.

(37) 1978 அரசியலமைப்பின்படி சட்டவாக்கத்தின் (பாராளுமன்றத்தின்) அதிகாரங்களும் பணிகளும் அடங்கிய விடையைத் தெரிவுசெய்க.

A. சட்டங்களை இயற்றுதல்.

B. குற்றப்பிரேரணைகளை சமர்ப்பித்தல்.

C. சட்டங்களுக்கு விளக்கமளித்தல்.

D. கட்டளைகளை பிறப்பித்தல்.

E. வினாக்களைக் தொடுத்தல்

(1) A,B,E (2) B, C, E (3) A, C, E (4) B, D, C

(38)பின்வரும் கூற்றுகளுடன் தொடர்புடைய நிறுவனம் எது?

- சிறு குற்றங்கள், குடும்பப் பிரச்சினைகளை ஆரம்ப நிலையிலேயே தீர்த்துக்கொள்ள முடிதல்.
- நீதி அமைச்சினால் சட்டபூர்வ நிறுவனமொன்றாக அங்கீகரிக்கப்பட்டிருத்தல்.
- எந்தவொரு பிரஜையும் இலகுவாகத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடிதல்.

(1) உயர்நீதிமன்றம். (3) மேல்நீதிமன்றம்.

(2) மாவட்ட நீதிமன்றம். (4) இணக்கச்சபை.

(39)பின்வரும் "அ" நிரலில் இலங்கையிலிருந்த அரசியல் அமைப்புகளும் "ஆ" நிரலில் அவ்வரசியலமைப்புகளினால் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டவாக்கச் சபைகள் அழைக்கப்பட்ட விதமும் தரப்பட்டுள்ளன. அதற்கேற்ப "அ" நிரலையும் "ஆ" நிரலையும் இணைக்கும்போது கிடைக்கும் சரியான விடை எது?

"அ" நிரல்	"ஆ" நிரல்
1. 1910 குறு-மெக்கலம் சீர்திருத்தம்	A. அரசுக்கழகம்
2. 1931 டொனமூர் சீர்திருத்தம்	B. தேசிய அரசுப் பேரவை
3. 1947 சோல்பரி யாப்பு	C. சட்டவாக்கக் கழகம்
4. 1972 முதலாவது குடியரசு யாப்பு	D. பாராளுமன்றம்

(1) BCDA (2) BDAC (3) CADB (4) CABD

(40) பின்வரும் கூற்றுகளைக் கருத்திற் கொள்க.

A. அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையில் உயர் எழுத்தறிவு மட்டம் காணப்படுகிறது.

B. அபிவிருத்திச் சவால்களை எதிர்கொள்வதற்கு இலங்கை சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்து வருகின்றது.

இக்கூற்றுகளில்,

(1) A கூற்றானது B கூற்றை விளக்குகின்றது.

(2) A கூற்று உண்மையாவதுடன் B கூற்று பொய்யானது.

(3) A கூற்று பொய்யாவதுடன் B கூற்று உண்மையானது.

(4) A, B ஆகிய இரு கூற்றுகளுமே உண்மையானவை.

**

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

62	T	II

கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – உதவி மதிப்பீடு - 2026

පුරවැසි අධ්‍යාපනය I, II
குடியியற் கல்வி I, II
Civic Education I, II

குடியியற் கல்வி II

- முதலாம் வினா கட்டாயமானது.
- முதலாவது வினா உட்பட மேலும் நான்கு வினாக்கள் அடங்கலாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

1. (i) நவீன தேசிய அரசுகள் பலமடைவதற்குத் தேவையான பின்னணியை உருவாக்கிய **இரு** அரசியல் சிந்தனையாளர்களைப் பெயரிடுக.
   (ii) பாராளுமன்ற ஆட்சிமுறையொன்றின் **இரு** நிறைவேற்று பிரிவுகளையும் குறிப்பிடுக.
   (iii) 1957 இல் இலங்கையில் அதிகாரப் பகிர்விற்காக ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்ட **இரு** அரசியல் தலைவர்களையும் பெயரிடுக.
   (iv) வடஅமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்துடன் (NAFTA) தொடர்புடைய **இரு** நாடுகளை எழுதுக.
   (v) சட்டத்தின் ஆட்சி நடைமுறையிலுள்ள சமூகமொன்றில் காணப்படும் **இரு** பண்புகளை எழுதுக.
   (vi) 1833 கோல்புரூக் அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் சட்டவாக்கச் சபைக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட பிரதான **இரு** முறைகளையும் அதன் கட்டமைப்பையும் எழுதுக.
   (vii) தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கை அரசினால் நிறைவேற்றி நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்களுள் **இரண்டினை** குறிப்பிடுக.
   (viii) வளங்களின் உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனுக்காகப் பயன்படுத்தப்படும் 3R முறைமையின் **இரு** கட்டங்களைக் குறிப்பிடுக.
   (ix) ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகளுள் **இரண்டை** எழுதுக.
   (x) இலங்கையின் வடக்கு புகையிரதப் பாதை மற்றும் தெற்கு அதிவேகப் பாதை என்பவற்றை அமைப்பதற்கு நிதியுதவி வழங்கிய **இரு** நாடுகளையும் முறையே பெயரிடுக.

(புள்ளிகள் 02 x 10 = 20)

2. அரசொன்றின் பிரஜைகள் நேரடியாகவே ஆட்சிப் பணிகளில் பங்கேற்பதற்கான வாய்ப்பு வரையறுக்கப்பட்டதாக இருப்பதால், பிரதிநிதித்துவ ஜனநாயகம் தற்காலத்தில் மிகவும் வெற்றிகரமான ஆட்சிமுறையாக மாறியுள்ளது.
   (i) இலங்கையின் தேர்தல் தொகுதிகளைப் நிர்ணயம் செய்யும் நிறுவனத்தையும், தேர்தலை நடத்தும் அதிகாரமுள்ள நிறுவனத்தையும் முறையே பெயரிடுக. **(புள்ளிகள் 02)**
   (ii) ஜனநாயக ஆட்சிமுறை நிலவும் நாட்டில் அரசியலமைப்பிற்கு அமைவாகச் செயற்படுவதால் கிடைக்கும் **மூன்று** நன்மைகளைக் குறிப்பிடுக. **(புள்ளிகள் 03)**

(iii)

(a) ஜனநாயக சமூகத்தின் நல்வாழ்விற்காகச் சுதந்திரமான ஊடகங்களினால் ஆற்றப்பட வேண்டிய **இரு** பணிகளை குறிப்பிடுக. **(புள்ளிகள் 02)**

(b) மேலே (a) இல் குறிப்பிடப்பட்ட ஒரு பணியானது சமூகத்தின் நல்வாழ்விற்கு எவ்வாறு பங்களிக்கிறது என்பதைச் சுருக்கமாக விளக்குக. **(புள்ளிகள் 03)**

PAST PAPERS WIKI

3. தற்போதைய சமூகம் கலாசாரப் பன்முகத்தன்மை கொண்ட சிக்கலான ஒன்றாக இருந்தபோதிலும், பல அரசுகள் அபிவிருத்தியடைந்த நிலையை அடைந்திருப்பது பன்முகத்தன்மையினுள் ஒற்றுமையைக் கட்டியெழுப்பியுள்ளமையினாலாகும்.

(i) இலங்கையிலுள்ள சிங்கள மக்கள் பின்பற்றும் **இரு** மதங்களைப் பெயரிடுக. **(புள்ளிகள் 02)**

(ii) பல்கலாசார சமூகமொன்றின் சிறப்பான செயற்பாட்டிக்கு பிரஜையொருவர் விருத்தி செய்யவேண்டிய **மூன்று** நற்பண்புகளை எழுதுக. **(புள்ளிகள் 03)**

(iii)

(a) பல்கலாசார சமூகத்தில் மக்கள் ஒற்றுமையாகச் செயற்படுவதனால் கிடைக்கும் **இரு** நன்மைகளை எழுதுக. **(புள்ளிகள் 02)**

(b) இலங்கையினுள் இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்குப் பாடசாலை மாணவன் எனும் வகையில் நீர் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளைச் சுருக்கமாக விளக்குக. **(புள்ளிகள் 03)**

4. சமூக அபிவிருத்திச் செயன்முறையில் நேர்மறையானதும் உருவாக்கத்திற்குரியதுமான ஒரு பணியை ஆற்றும் சக்தியாக முரண்பாட்டைக் இனங்காண முடியும்.

(i) சர்வதேச முரண்பாடுகளை **இரு** பிரதான பிரிவுகளின் கீழ் இனங்காண முடியும். அவை யாவை? **(புள்ளிகள் 02)**

(ii) முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு மத்தியஸ்தர் ஒருவரைத் தெரிவு செய்யும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய **மூன்று** விடயங்களை எழுதுக. **(புள்ளிகள் 03)**

(iii)

(a) மோதல் தீர்வு நடவடிக்கையின்போது இணக்கபாட்டை ஏற்படுத்திக் கொள்ளும் **இரு** சந்தர்ப்பங்களை எழுதுக. **(புள்ளிகள் 02)**

(b) பாடசாலை மாணவர்களிடையே ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு வழிகாட்டல் ஆலோசனையாக்கத்தின் (Counseling) மூலம் வழங்கக்கூடிய தீர்வுகளைச் சுருக்கமாக விளக்குக. **(புள்ளிகள் 03)**

5. சட்டத்திற்கு மதிப்பளிப்பதும் கீழ்ப்படிவதும் பிரஜைகளின் பிரதான பொறுப்பாவதுடன், அதனை அறியாதிருப்பது அதிலிருந்து தப்பிப்பதற்கான வழியாக அமையாது.

(i) பேச்சுவார்த்தை இடம்பெறும் முறைக்கேற்ப வகைப்படுத்தக்கூடிய **இரு** பிரிவுகளை எழுதுக. **(புள்ளிகள் 02)**

(ii) இலங்கையில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பிரதானிகள் **மூவரைப்** பெயரிடுக. **(புள்ளிகள் 03)**

(iii)

(a) நீதிமன்றத்தின் சுயாதீனத்தைப் பேணுவதற்காக இலங்கையின் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள **இரு** ஏற்பாடுகளைக் குறிப்பிடுக. **(புள்ளிகள் 02)**

(b) பாடசாலை மாணவன் எனும் வகையில் பாடசாலையின் சட்ட திட்டங்களை பாதுகாப்பதற்கு நீர் ஆற்றக்கூடிய பங்களிப்பை விளக்குக. **(புள்ளிகள் 03)**

6. சமூகத்தில் சிறந்த பிரஜையாக வாழ்வதற்கு மனித உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய தெளிவு அவசியமானதாகும்.

(i) பெண்கள் தொடர்பில் லிச்சவி அரச குடும்பத்தினர் பின்பற்றிய **இரு** கொள்கைகளை எழுதுக. **(புள்ளிகள் 02)**

(ii) சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பில் இலங்கையில் செயற்படும் **மூன்று** நிறுவனங்களை எழுதுக. **(புள்ளிகள் 03)**

(iii)

(a) 1978 அரசியலமைப்பிற்கு அமைய உரிமைகள் மீறப்படும்போது நடவடிக்கை எடுப்பதற்காக முறைப்பாடு செய்ய வேண்டிய **இரு** நிறுவனங்களை எழுதுக. **(புள்ளிகள் 02)**

(b) அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதிலுள்ள வரையறைகள் பற்றிய சிறு விளக்கமொன்றை எழுதுக. **(புள்ளிகள் 03)**

7. தற்காலத்தில் சுற்றாடல் பற்றி அதிக கவனம் செலுத்தப்படுவதற்குக் காரணம் மனிதத் தலையீடுகளினால் சுற்றாடல் சமநிலை சீர்குலைவதாகும்.

(i) சூழற்தொகுதி உருவாகியுள்ள பிரதான **இரு** கூறுகளைக் குறிப்பிடுக. **(புள்ளிகள் 02)**

(ii) இயற்கைச் சூழலில் நிகழும் **மூன்று** இயற்கை நிகழ்வுகளை எழுதுக. **(புள்ளிகள் 03)**

(iii)

(a) சமூகச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுவதனால் உண்டாகும் **இரு** பாதகமான விளைவுகளை எழுதுக. **(புள்ளிகள் 02)**

(b) அவற்றுள் **ஒரு** பாதகமான விளைவைத் தடுப்பதற்கு நீர் செய்யக்கூடிய விடயங்களைச் சுருக்கமாக விளக்குக. **(புள்ளிகள் 03)**

***

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
Minister of Education, Higher Education and Vocational Education
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය - 2026

கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2026

General Certificate of Education (Ordinary Level) Examination - 2026

අනුහුරු ප්‍රශ්න පත්‍රය உதவி மதிப்பீட்டுதாள் Supportive Assessment	- පිළිතුරු පත්‍රය - விடைப்பத்திரம் - Answer Sheet	දෙමළ මාධ්‍යය தமிழ் மொழி மூலம் Tamil Medium

පුරවැසි අධ්‍යාපනය

CIVIC EDUCATION - குடியியற் கல்வி



පිළිතුරු පත්‍රය - விடைப்பத்திரம் - Answer Sheet

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
தேசிய மொழிகள் மற்றும் சமூக விஞ்ஞான கிளை
Ministry of Education, Higher Education and Vocational Education
National Languages and Humanities Branch

குடியியற் கல்வி I - விடைப்பத்திரம்

-1-

வினா எண்	விடை எண்	வினா எண்	விடை எண்	வினா எண்	விடை எண்	வினா எண்	விடை எண்
01.	**3**	**11.**	2	**21.**	4	**31.**	4
02.	**2**	**12.**	3	**22.**	3	**32.**	1
03.	**1**	**13.**	3	**23.**	1	**33.**	2
04.	**1**	**14.**	1	**24.**	4	**34.**	3
05.	2	**15.**	3	**25.**	2	**35.**	3
06.	4	**16.**	2	**26.**	4	**36.**	1
07.	2	**17.**	3	**27.**	1	**37.**	1
08.	1	**18.**	3	**28.**	4	**38.**	4
09.	2	**19.**	2	**29.**	1	**39.**	3
10.	1	**20.**	2	**30.**	3	**40.**	4

(மொத்தப் புள்ளிகள் $1 \times 40 = 40$*)*

குடியியற் கல்வி II - விடைப்பத்திரம்

1.

I.

- நிக்கோலோ மாக்கியவெல்லி (Niccolò Machiavelli)
- ஜூன் போடின் (Jean Bodin)
- தோமஸ் ஹோப்ஸ் (Thomas Hobbes)

(இவற்றுள் ஏதேனும் இரண்டு பெயர்கள் - பெயர் முதற்தெழுத்துக்கள் இல்லாவிட்டாலும் புள்ளிகள் வழங்குக)

II.

- பெயரளவு நிறைவேற்று அதிகாரம்
- உண்மையான நிறைவேற்று அதிகாரம்

III.

- எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க
- எஸ்.ஜே.வி. செல்வநாயகம்

IV.

- ஐக்கிய அமெரிக்கா
- கனடா
- மெக்சிகோ ***(இவற்றுள் ஏதேனும் இரண்டு நாடுகள்)***

V.

- சுயாதீனமான நீதிமன்றத் தொகுதி ஒன்று காணப்படல்.
- சட்டம் பற்றிய விழிப்புணர்வு ஒவ்வொரு பிரஜைக்கும் இருத்தல்.
- சட்டத்தை அறியாதிருந்தமை ஒரு தப்பிப்பதற்கான காரணமாகக் கருதப்படாமை.
- நியாயமானதும் காலதாமதமற்றதுமான நீதி வழங்கல்.
- தனிநபர்களின் தராதரம், தொழில், செல்வம் அல்லது வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு சட்டம் நடைமுறைப்படுத்தப்படாமை.
- சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்களாகக் கருதப்படல்.
- நீதிபதிகள் தமது தீர்ப்புகளை வழங்குவதில் செல்வாக்குகள் எதுவும் ஏற்படாதிருத்தல். ***(இவற்றுள் ஏதேனும் இரண்டு)***

VI.

- உத்தியோகபூர்வ - 9
- உத்தியோகபூர்வமற்ற - 6

VII.

- கடைகள், அலுவலக ஊழியர் சட்டம்
- மகப்பேற்று நலன்களளிப்பு அவசரச் சட்டம்
- தொழிற்தகராறுகள் சட்டம்
- சம்பளக் கட்டுப்பாட்டுச் சபை அவசரச் சட்டம்
- ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் ***(இவற்றுள் ஏதேனும் இரண்டு சட்டங்கள்)***

VIII.

- குறைத்தல் (Reduce)
- மீள்பயன்பாடு (Reuse)
- மீள்சுழற்சி (Recycle)

IX.

- ஐக்கிய அமெரிக்க
- பிரித்தானியா
- பிரான்ஸ்
- ரஷ்யா
- சீனா ***(இவற்றுள் ஏதேனும் இரண்டு நாடுகள்)***

X.

- இந்தியா
- சீனா

(புள்ளிகள் $2 \times 10 = 20$*)*

2.

- எல்லை தொடர்பான நிர்ணய ஆணைக்குழு
- தேர்தல்கள் திணைக்களம் *(புள்ளிகள் 02)*

II.

- ஆட்சியின் முறைமை மற்றும் ஸ்திரத்தன்மை பாதுகாக்கப்படல்.
- பிரஜைகளின் உரிமைகள் தொடர்பாக ஆட்சியாளர், பாலிக்கப்படுபவர் ஆகிய இரு தரப்பினரும் விழிப்புணர்வுடன் இருத்தல்.
- ஆட்சியாளர்கள் தன்னிச்சையாகச் செயற்பட்டால் அதனைத் தடுத்து நிறுத்தக் கூடியதாக இருத்தல்.
- நீதித்துறையின் சுயாதீனத்தன்மை பாதுகாக்கப்படல்.
- அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படல்.
- அரசியலமைப்புடன் தொடர்புடைய நிறுவனங்கள் மூலம் நாட்டின் பிரஜைகள் தமது தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக இருத்தல்.
- சட்டத்தின் பாதுகாப்பு அனைவருக்கும் சமமாகக் கிடைத்தமை. ***(இவற்றுள் ஏதேனும் மூன்று கருத்துக்களுக்கு 03 புள்ளிகள்)***

III. (a)

- உண்மையானதும் துல்லியமானதுமான தகவல்களை மக்களுக்கு வழங்குதல்.
- நடுநிலையாகவும் சமூக நலனுக்கு உகந்த முறையிலும் தகவல்களை வழங்குதல்.
- மக்களின் குறைகளை ஆட்சியாளர்களின் கவனத்திற்கு எட்டச் செய்தல்.
- ஆட்சியாளர்களை ஜனநாயகப் பாதைக்கு வழிநடத்துதல்.
- மக்களின் அறிவை விருத்தி செய்தல்.
- காலத்திற்கு ஏற்ற தகவல்களைச் சரியான நேரத்தில் மக்களுக்கு வழங்குதல். *(இவற்றுள் ஏதேனும் இரண்டு கருத்துக்களுக்கு 02 புள்ளிகள்)*

(b) ***(சுதந்திர ஊடகம் ஒன்றினால் சமூக நல்வாழ்வு பாதுகாக்கப்படும் விதம் குறித்து மாணவன் சுருக்கமாக விவரித்திருக்க வேண்டும். - புள்ளிகள் 03)***

3.

I.

- பௌத்தம்
- இந்து
- கிறிஸ்தவம் / கத்தோலிக்கம் ***(இவற்றுள் ஏதேனும் இரண்டு மதங்களுக்கு 02 புள்ளிகள்)***

II.

- ஒருவரிலொருவர் கலாசாரங்களை இனங்கண்டு புரிந்துணர்வுடன் செயற்படுதல்.
- ஒருவரையொருவர் மதித்தல்.
- பிற மதங்களை அவமதிக்காதிருத்தல்.
- பிற கலாசாரங்களை மதித்தல்.
- முரண்பாடுகள் ஏற்படாத வகையில் செயற்படுதல்.
- கூட்டுப்பொறுப்பை விருத்தி செய்தல்.
- ஒன்றுபட்டுச் செயற்படுவதன் மூலம் வெற்றிகளை அடைவது இலகுவானது என்பதைப் புரிந்து கொள்ளல்.
- ஏனைய இன மக்களின் மொழிகளைக் கற்றலும் பயன்படுத்துதலும்.
- சர்வ மதத் திட்டங்களைச் செயற்படுத்துதல்.
- பிற கருத்துக்களைச் சகித்துக் கொள்ளலும் அவற்றை மதித்தலும். *(இவற்றுள் ஏதேனும் மூன்று கருத்துக்களுக்கு 03 புள்ளிகள்)*

III. (a)

- தேசிய ஒருமைப்பாடும் நல்லிணக்கமும் விருத்தியடையும்.
- முரண்பாடுகள் குறையும்.
- பரஸ்பர நல்விருப்பும் நம்பிக்கையும் விருத்தியடையும்.
- ஒரே இனம், ஒரே நாடு என்ற உணர்வு விருத்தியடையும்.
- மனித சுதந்திரமும் ஜனநாயகமும் உறுதிப்படுத்தப்படும்.
- நாட்டின் அபிவிருத்திக்காக ஒவ்வொரு பிரஜையும் தவறாது செயற்படவும், அதனைத் தேசியக் கடமையாகக் கருதிச் செயற்படவும் தூண்டப்படுவர்.
- பிற மதங்கள் அல்லது கலாசாரங்களை அவமதிக்காத வகையில் நடந்துகொள்ளப் பழகிக் கொள்வர். *(இவற்றுள் ஏதேனும் இரண்டு கருத்துக்களுக்கு 02 புள்ளிகள்)*

(b)

- நல்லிணக்கத்தைப் பேணிச் செல்லல்.
- ஒருவரிலொருவர் கலாசார நிகழ்வுகளில் பங்குபற்றுதல்... **(என்றவாறாக ஒரு பாடசாலை மாணவன் என்ற ரீதியில் எடுக்கக்கூடிய ஏதேனும் நடவடிக்கைகளை மாணவன் விவரித்திருப்பின் உரிய புள்ளிகளை வழங்குக) (புள்ளிகள் 03)**

4.

I.

- கொள்கை ரீதியான மோதல்
- பொருளாதார ரீதியான மோதல் அல்லது யுத்த ரீதியான மோதல் *(புள்ளிகள் 02)*

II.

- இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடுநிலையான ஒரு நபராக இருத்தல்.
- முரண்பாடு பற்றிய முழுமையான புரிதல் கொண்ட ஒருவராக இருத்தல்.
- தனது தீர்வுகளையோ முடிவுகளையோ அவர்கள் மீது திணிப்பவராக இல்லாதிருத்தல்.
- இரு தரப்பினர் மீதும் அழுத்தங்களைப் பிரயோகிக்காதிருத்தல்.
- இரு தரப்பினரதும் உடன்பாட்டுடன் தீர்வுகளை நோக்கி வழிநடத்துதல்.
- நேரடியாகச் சந்திக்க முடியாத சந்தர்ப்பங்களில் தனித்தனியாகச் சந்தித்துக் கருத்துக்களைப் பெற்று இரு தரப்பினருக்கும் தகவல் பரிமாற்றம் செய்தல்.

- நெகிழ்ச்சியான தீர்வுகளை நோக்கி வழிநடத்தி "வெற்றி - வெற்றி" (Win-Win) தீர்வுகளை வழங்குதல். ***(இவற்றுள் ஏதேனும் இரண்டு கருத்துக்களுக்கு 03 புள்ளிகள்)***

III. (a)

- குடும்பத் பிரச்சினைகள்
- முதலாளி - தொழிலாளி பிரச்சினைகள்
- அயலவர்களுடனான பிரச்சினைகள்
- நிறுவனங்களுக்கு இடையிலான பிரச்சினைகள்
- சமவயதுக் குழுக்களுக்கு இடையிலான பிரச்சினைகள் **(இவற்றுள் ஏதேனும் இரண்டு முரண்பாடுகளுக்கு 02 புள்ளிகள்)**

(b)

- மாற்றுத் தீர்வுகளை நோக்கிப் பங்காளிகளை வழிநடத்துதல்.
- முரண்பாட்டினால் ஏற்படும் விளைவுகள் மற்றும் துன்புறுத்தும் தன்மைகள் குறித்து இரு தரப்பினருக்கும் விழிப்புணர்வூட்டல்.
- முரண்பாடுகளைத் தளர்த்துவதற்காகப் பங்காளிகளைச் செயற்பட வைத்தல்.

(இவற்றுள் ஒன்றை மாணவன் விவரித்திருந்தால் போதுமானது. - புள்ளிகள் 03)

5.

I.

- கட்டாய பேச்சுவார்த்தை நடாத்துதல்
- சுயமாக முன்வந்து பேச்சுவார்த்தை நடாத்துதல் ***(புள்ளிகள் 02)***

II.

- பிரதம நீதியரசர்
- நீதி அமைச்சர்
- சட்டமா அதிபர் ***(புள்ளிகள் 03)***

III. (a)

- சுயாதீனமாக நீதிபதிகளை நியமித்தல்.
- நீதிபதிகளை நியமித்தது போன்று இலகுவில் பதவியிலிருந்து நீக்க முடியாமை.
- நீதிபதிகளின் சம்பள பாராளுமன்ற (பொது) திரட்டு நிதியத்திலிருந்து வழங்கப்படல்.
- நீதிபதிகள் வேறு பதவிகளை ஏற்றுக்கொள்வதாயின் அதற்குச் சிறப்பு அனுமதி பெறப்படல் வேண்டும்.
- தேவையற்ற தலையீடுகள் மற்றும் கட்டுப்பாடுகளைக் கட்டுப்படுத்தல்.
- நீதிச் சேவை ஆணைக்குழுவை உருவாக்குதல். ***(இவற்றுள் ஏதேனும் இரண்டு கருத்துக்களுக்கு 02 புள்ளிகள்)***

(b)

- குறித்த நேரத்திற்குப் பாடசாலைக்கு வருகை தருதல்.
- ஒழுங்கான முறையில் சீருடை அணிதல்.

- சக மாணவர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படுதல். *(என்றவாறு சட்டத்தை மதிக்கும் மாணவனாகச் செயற்படும் விதம் குறித்து மாணவரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் விடைகளைக் கருத்திற்கொண்டு புள்ளிகளை வழங்குக.)* ***(புள்ளிகள் 03)***

6.

I.

- திருமணமாகாத இளம் பெண்களைப் பாதுகாத்தல்.
- திருமணமான பெண்களைப் பாதுகாத்தல். ***(புள்ளிகள் 02)***

II.

- சுற்றாடல் அமைச்சு
- வனப்பாதுகாப்புத் திணைக்களம்
- புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க அகழ்வாராச்சி பணியகம்

  சமூத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை
- வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
- கரையோர பாதுகாப்புத் திணைக்களம் ***(இவற்றுள் ஏதேனும் மூன்று நிறுவனங்களுக்கு 03 புள்ளிகள்)***

III. (a)

- உயர் நீதிமன்றம்
- மனித உரிமைகள் ஆணைக்குழு
- நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் நாயகம் **(ஒம்பூட்ஸ்மன்)** ***(புள்ளிகள் 03)***

(b)

- தேசிய பாதுகாப்பு
- இன மற்றும் மத நல்லிணக்கத்தை விருத்தி செய்தல்
- தேசிய பொருளாதாரத்தைப் பாதுகாத்தல்
- பொதுச் சுகாதாரம்
- ஒழுக்கநெறி
- பிறரின் உரிமைகளைப் பாதுகாத்தலும் மதித்தலும், ... *(என்றவாறு அடிப்படை உரிமைகள் வரம்பிற்குட்படும் விதம் குறித்து மாணவர்கள் முன்மொழியும் விடைகளைக் கருத்திற்கொண்டு புள்ளிகளை வழங்குக)* *(புள்ளிகள் 03)*

7.

I.

- உயிரற்ற கூறுகள்
- உயிருள்ள கூறுகள்
- சமூகச் சுற்றாடல்
- இயற்கைச் சுற்றாடல் ***(இவற்றுள் ஏதேனும் இரண்டு கருத்துக்களுக்கு 02 புள்ளிகள்)***

II.

- கார்பன் வட்டம்
- நீரியல் வட்டம்

සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

- கனிம வட்டம்
- உணவுச் சங்கிலி (வலை) ***(இவற்றுள் ஏதேனும் மூன்று கருத்துக்களுக்கு 03 புள்ளிகள்)***

III. (a)

- சமூகத் தொடர்புகள் சீர்குலைதல்
- மத மற்றும் இன முரண்பாடுகள் ஏற்படுதல்
- சமூக அநீதிகள் நிகழ்தல்
- குடும்பக் கட்டமைப்பு சீர்குலைதல்
- பெற்றோர் - பிள்ளை தொடர்புகள் சீர்குலைதல்
- சமூக சீர்கேடுகள் அதிகரித்தல்
- சமூக விரோதச் செயல்கள் அதிகரித்தல் *(இவற்றுள் ஏதேனும் இரண்டு கருத்துக்களுக்கு* *(02 புள்ளிகள்)*

(b)

(மேலே குறிப்பிடப்பட்டுள்ள பாதகமான விளைவுகளைத் தவிர்ப்பதற்கு மாணவர்கள் முன்மொழியும் விடைகளைக் கருத்திற்கொண்டு புள்ளிகளை வழங்குக)
(புள்ளிகள் 03)

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank